


நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக சிறப்பு செயற்குழு கூட்டம் முல்லைநகர் கலைஞர் அறிவாலயம் இனமான பேராசிரியர் கூட்டரங்கில் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமிக்கு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கலந்து கொண்டு பொன்னுசாமியின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி மௌன அஞ்சலி செலுத்தி அவர் கழகத்திற்கு ஆற்றிய பணிகளை பற்றி பேசினார். இதில் அமைச்சர் மதிவேந்தன், சி.மணிமாறன் மற்றும மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே, க.கார்த்திகேயன், ச.சாந்தி, ஃபெலிக்ஸ் ராஜா, பக்தவச்சலம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி அருகே சாலூர் கிராமத்தில் மழையால் தரை பாலம் அடித்து செல்லப்பட்டது. தகவல் அறிந்து தர்மபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன் சேதமடைந்த தரை பாலத்தை பார்வையிட்டு,கிராமத்து பொதுமக்களிடம் சேதம் குறித்து கேட்டறிந்தார். மேலும் கிராமத்து பொதுமக்கள் பாலம் கட்டி கொடுக்க வேண்டும் என்று வைத்த கோரிக்கையை மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் சி. முத்துக்குமார்,இளைஞர் அணி அமைப்பாளர் சர்மா,துணை அமைப்பாளர் புகழேந்தி; கோகுல், அருள்மாது திருப்பதி, மணிகண்டன் நிஷாந்த், பன்னீர்செல்வம், ஆறுமுகம், முத்து, மணிவண்ணன் முருகன் உள்ளிட்ட திமுகவினர் உள்ளனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் தலைமையில்

# தமிழ்நாடு தலைகுனியாது “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பயிற்சிக் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் அவர்களின் திட்டமிடலின்படி, வருகின்ற சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை கழகம் மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் தமிழ்நாட்டை வளைத்திட முயற்சிக்கும் வஞ்சக சூழ்ச்சி கொண்ட ஒன்றிய பா.ஜ.க. அரசின் முன்பு “தமிழ்நாடு தலைகுனியாது” என்ற பரப்புரையை கழகம் தொடங்கவுள்ளது. அதன் ஒருபகுதியாக ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் கழகத்தின் வெற்றியை உறுதி செய்யும் வகையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” என்ற முன்னெடுப்புக்காக **“கழக மாவட்டச் செயலாளர்கள், மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்களுக்கான பயிற்சிக் கூட்டம்”** வரும் 28.10.2025 - செவ்வாய்க்கிழமை, காலை 9.00 மணி அளவில் மாமல்லபுரம், ஈ.சி.ஆர்.சாலையில் உள்ள “கான்ஃப்ளுயன்ஸ் ஹாலில்” ( Confluence Hall ) நடைபெறும்.

இக்கூட்டத்தில் **மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர்கள், கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகரச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பகுதிச் செயலாளர்கள், பேரூர்ச் செயலாளர்கள்** அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# மறைந்த சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமிக்கு நினைவேந்தல்!

## நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சிறப்பு செயற்குழுக் கூட்டத்தில் அஞ்சலி!

நாமக்கல் அக் 27-

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் பழங்குடியினர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி உடல்நலக் குறைவால் காலமானார். நடுக் கோம்பையில் உள்ள இல்லத்தில்வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், சட்டப் பேரவை, மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து கொல்லி மலை சோளக்காட்டில் உள்ள அவரது வீட்டிற்கு உடல் கொண்டு செல்லப்பட்டு மலைவாழ் மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டு தமிழ்நாடு அரசு உத்தரவின்பேரில் மறைந்த சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமியின் உடலுக்கு அரசுத் தரப்பில் மரியாதை செலுத்தப்பட்டது. அவரது உடல் மீது திமுக கொடி போர்த்தப்பட்டு, காவல் துறையினர் 30 குண்டுகள் முழங்க இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இதையடுத்து நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக சிறப்பு செயற்குழு கூட்டம் முல்லைநகர் கலைஞர் அறிவாலயம் இனமான பேராசிரியர்

கூட்டரங்கில் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமிக்கு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில் நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு மறைந்த சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமியின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி அவர் கழகத்திற்கு ஆற்றிய பணிகளை பற்றி பேசுகையில்...

சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகத் துணை செயலாளரும். நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் துணைத் தலைவருமான பொன்னுசாமி கடந்த 23.10.2025 அன்று திடீர் உடல் நலக்குறைவால் நம்மைவிட்டு மறைந்த செய்தி பேரதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

1986ஆம் ஆண்டு கொல்லிமலை வாழவந்தி நாடு ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டது முதல் மக்கள் பணியை தனது இறுதி காலம் வரை தொய்வின்றி ஆற்றி வந்தவர்.

மலைவாழ் மக்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம். கொல்லிமலையில் இரத்த வங்கி,மிளகு பதப்படுத்தும் தளம் , துறையூர் சாலையை 40 கோடி ரூபாய் செலவில் அகலப்படுத்தும் பணி என பல்வேறு சாதனைகளைப் புரிந்தவர். தற்போது சேந்தமங்கலம் தொகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சனையை தீர்க்கும் வகையில் ரூ.500 கோடியில் கூட்டுக்குடிநீர்த் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வர உள்ளது.

அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்கள் என்றும், அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிக்க வந்த துணை முதல்வருக்கும், துணை முதல்வர் வாயிலாக ஆறுதல் தெரிவித்த தமிழ்நாடு முதல்வருக்கும், அமைச்சர்களுக்கும், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி என்று கூறினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் நலங்கிள்ளி, ராணி பெரியண்ணன், பொருளாளர் ஏ.கே.பாலசந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் மாயவன், பொதுக்குழு உறுப்பினர் காளியப்பன், மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, நகர செயலாளர்கள் ராணா ஆனந்த் சிவக்குமார், ஒன்றிய செயலாளர்கள் அசோக்குமார், ராமசுவாமி , நவலடி, பழனிவேல், ஜெகநாதன், பாலசுப்பிரமணி, செந்தில் முருகன், எம்பி கௌதம், ஜெயபிரகாஷ் , ஆர்.எம். துரைசாமி,

பேரூர் செயலாளர்கள் தனபாலன், முருகேசன், செல்லவேல், சுப்பிரமணி, ஜெயக்குமார் பொன்.நல்லதம்பி பழனியாண்டி, அன்பழகன் கண்ணன், ராஜேஷ் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் பொன் சித்தார்த், கிருபாகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் 300க்கும் மேற்பட்ட

# புதிய சுற்றுலா தலங்களை சர்வதேச தரத்தில் உயர்த்த நடவடிக்கை!

## செஞ்சிக்கோட்டையை ஆய்வு செய்த பின் அமைச்சர் இரா.ராஜேந்திரன் தகவல்!



செஞ்சி, அக். 27-

தமிழ்நாட்டில் 300க்கும் மேற்பட்ட புதிய சுற்றுலா தலங்களை சர்வதேச தரத்தில் உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக செஞ்சிக் கோட்டையை ஆய்வு செய்த சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் சுற்றுலாத்தலமாக செஞ்சிக்கோட்டை திகழ்ந்து வருகிறது.

இந்நிலையில் கடந்த ஜூன் மாதத்தில்உலக பாரம்பரிய சின்னமாக செஞ்சிக்கோட்டையை யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன், செஞ்சிக் கோட்டையில் இன்று நேரில் சென்று பார்வையிட்டார்.

செஞ்சிக்கோட்டையில் உள்ள கல்யாண மஹால், உடற்பயிற்சி கூடம், நெற்களஞ்சியம்,திருவண்ணாமலை சாலையில் உள்ள பி. ஏரி உள்ளிட்ட பல்வேறு இடங்களை அவர் பார்வையிட்டார்.

இதில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தரணிவேந்தன், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச்செல்வன் , மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் ஷீலா தேவி சேரன்,ஒன்றிய குழு தலைவர்கள் செஞ்சி விஜய குமார், வல்லம் அமுதா ரவிக்குமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், இந்திய தொல்லியல் துறையின் கண்காணிப்பாளர் சுஷாந்த் குமார், பொறியாளர் பரணிதரன், உதவி தொல்லியல் துறை கண்காணிப்பாளர்கள் ரமேஷ், சுஜாதா,மாவட்ட சுற்றுலா துறை அலுவலர் ஜனார்த்தனன்,பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் முகமது ரிஸ்வான், பேரூராட்சிகளின் உதவி செயற் பொறியாளர் ராதாகிருஷ்ணன், பேரூராட்சி செயல் அலுவலர்கலையரசி,வட்டாட்சியர் துரைச்செல்வன் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபா சங்கர் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேந்திரன் செய்தியாளர்களிடம் கூறுகையில்:

தமிழ்நாடு முதல மைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி சுற்றுலாத்துறை மேம்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் சுற்றுலாத் துறைக்கு தேவையான நிதியை முதலமைச்சர் வழங்கி வருகிறார். தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறைக்கு என கொள்கையை உருவாக்கி 300க்கும் மேற்பட்ட புதிய சுற்றுலா தளங்களை சர்வதேச தரத்தில் உயர்த்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது .

செஞ்சி கோட்டையை யுனெஸ்கோ அமைப்பால் பாரம்பரிய சின்னமாக அறிவித்திருக்கிறது தினமும் சுற்றுலா பயணிகள் செஞ்சிக்கோட்டையை காண வருகின்றனர் மாதத்திற்கு சுமார் 18,000 பேர் வந்து செல்கின்றனர் செஞ்சி கோட்டையை சுற்றுலா தலமாக மேம்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்து முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். சுற்றுலா பயணிக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தரப்படும் செஞ்சிக்கோட்டையில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளையும், செஞ்சி பி. ஏரியில் படகு சவாரி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.



துணை முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.ஆர்.எஸ்.செந்தமிழ்ச்செல்வன் ஏற்பாட்டில், தஞ்சை மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் 600 நபர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, வழங்கினார். உடன் ச.முரசொலி எம்.பி, மேயர் சண். இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, சி.இறைவன், எல்.ஜி.அண்ணா, கனகவள்ளி பாலாஜி, க.முகில்வேந்தன், வெங்கடேசன் மற்றும் பலர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஓசூர் சட்டமன்றத் தொகுதி, மாநகர வடக்கு பகுதியில் மக்களை தேடி சட்டமன்ற உறுப்பினர் நிகழ்ச்சி வார்டு 12 ,14,15 பாகலூர் குடியிருப்பு வாரியம், லட்சுமி நாராயணா நகர், தர்கா பகுதியில் மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ் மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். அப்போது உடன் மேயர் சத்யா , துணை மேயர் ஆனந்தய்யா, மாதேஸ்வரன், சென்னீரப்பா, கண்ணன், வார்டு செயலாளர்கள் மற்றும் குடியிருப்பு பகுதி மக்கள் உள்பட பலர் உடன் கலந்து கொண்டனர்.